**உஹன பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உஹன பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உஹன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்குரிய முத்திரை தீர்வை வருமானம் ரூபா 1,381,910 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | எதிர்கால கணக்குகளைத் தயாரிக்கும் போது அது சீர்செய்யப்படும். | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 100,000 ஆல் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் வர்த்தக உரிம வருமானம் ரூபா 123,000 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | கிராமிய வீதி அபிவிருத்தி செயற்திட்டம் 2021 இற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும் ரூபா 1,001,148 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்களின் மீதி மற்றும் வருமானத்திற்கான பங்களிப்பு மற்றும் மூலதன முதலீட்டுக் கணக்கிற்கான மானியங்களின் மீதி ஆகியவற்றிற்கு இடையே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 229,465 பொருத்தமின்மை காணப்பட்டது. | எதிர்கால கணக்குகளைத் தயாரிக்கும் போது அது சீர்செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களின் மீதி தொடர்பாக பட்டியல்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை மிகைத்த செலவினம் ரூபா 1,834,389 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 276,823 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,544,784 | 2,420,432 | 2,224,608 | 4,285,266 | 2,544,784 | 1,710,953 | 1,381,279 | 4,089,442 |
| (ii) | வாடகை | 12,974,968 | 4,506,650 | 4,615,140 | 163,874 | 9,924,968 | 8,564,709 | 8,470,615 | 272,364 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,601,000 | 492,250 | 492,250 | - | 1,501,000 | 529,250 | 529,250 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 950,000 | 819,770 | 819,770 | - | 900,000 | 845,155 | 845,155 | - |
| (v) | கூட்டுத் தொகை | 18,070,752 | 8,239,102 | 8,151,768 | 4,449,140 | 14,870,752 | 11,650,067 | 11,226,299 | 4,361,806 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதவரி நிலுவை ரூபா 4,285,266 ஆக இருந்தது. இது ஆண்டின் போது ரூபா 1,047,926 பட்டியலிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடும் போது 408 சதவீதத்திற்கு மேல் இருந்தது. | ஒன்லைன் முறைமை மூலம் கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் அது குறித்த விழிப்புணர்வுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதுடன் 2023 ஆம் ஆண்டில், அதிக மீதி உள்ளவர்களின் சொத்துக்கள் தடைசெய்யப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான நிலுவைகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 163,874 வாடகை நிலுவையில் ரூபா 85,531 தொகை 2017 ஆம் ஆண்டிலிருந்து எஞ்சியிருந்தது. | சட்ட நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவைகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் திண்மக் கழிவு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 1,789,907 தொகையில் ரூபா 1,314,000 முற்பணம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. பொதுமக்களின் எதிர்ப்பினால் இவ் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படாமலேயே கைவிடப்பட்டிருந்த போதிலும் 06 வருடங்களுக்கு மேலாகியும் ஒப்பந்ததாரரிடம் இருந்து முற்பணத் தொகையை அறவிடுவதற்கு சபை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | ஒப்பந்ததாரரின் பணிகள் தொடர்பாக ஏற்பட்ட அடிப்படை செலவினங்களை தவிர்த்து பணத்தை முற்பணமாக வழங்குவதற்கு சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒவ்வொரு வகைப்படுத்தல் தொடர்பாக பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிலையான சொத்துக்களையும் உள்ளடக்குகின்ற நிலையான சொத்துப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படும். | நிலையான சொத்துப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 44 மயானங்கள் மற்றும் 05 விளையாட்டு மைதானங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணிகள் தற்போது சபையின் பெயரில் கையகப்படுத்தப்பட்டு வருகின்றதுடன் அவை கையகப்படுத்தப்பட்ட பின்னர் அவை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படும். | பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபையின் வசம் உள்ள 06 வாகனங்களில் பழுதுபார்க்க முடியாத வாகனங்களை பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்துவதற்கு அல்லது முறையாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்களை ஏலமிடுவதற்கு பிரதிப் பிரதம செயலாளருக்கு (நிதி) பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ளது. | உடனடியாக கைதவிர்ப்புச் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறு 14 வாகனங்களின் உரிமைத்துவத்தை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 வாகனங்களின் உரிமைத்துவத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் எஞ்சிய வாகனங்களுக்கான ஆவணங்களை பூர்த்தி செய்ய முடியாததால் உரிமைமாற்றும் நடைமுறைகள் நிறுத்தப்பட்டுள்ளன. | வாகனங்களின் உரிமைத்துவத்தை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் சபையில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது 05 அமைய ஊழியர்களும் 02 பல்நோக்கு ஊழியர்களும் பணிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனர். | பதவியணியினரில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 01 முதல் 05 வருடங்கள் வரை பெறப்பட வேண்டியிருந்த ரூபா 167,403 தொகையான 13 ஊழியர் கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, இதுவரை ரூபா 2,160 தொகை அறவிடப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |